[1979 ஏப்ரல் 26

அரசு மருத்துவமனைகளில் வழங்கப்பெறும் மருந்துகள்.

* வினா எண். 843 — டாக்டர் ஏ. பொன்னுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தரம் குறைந்த மருந்துகள் அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படுவதைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: அரசு மருத்துவமனைகளில் வழங்கும் மருந்துகள் யாவும் மத்திய/மாநில அரசுடன் இணைந்துள்ள பெரும் நிறுவனங்களிடமிருந்து வாங்கி விநியோகிக்கப்படுவதால் தரம் குறைந்த மருந்துகள் அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படுவதற்கு இடமில்லை. மத்திய/மாநில இணைப்பு உடைய நிறுவனங்களில் சில மருந்து இனங்கள் கிடைக்காத வேளையில் தனியார் நிறுவனங்களில் வாங்கும்போது சம்பந்தப்பட்ட மருத்துவமனைகள் ஒப்பந்தப் புள்ளி கோரி மருத்துவ நிபுணர்களின் ஒப்புதலின் பேரில் வாங்கப் படுகின்றது.

மேலும் மருந்தக ஆய்வாளர்கள் அவ்வப்போது அரசு மருத்துவமனைகளிலிருந்தும் மருந்து தயாரிப்பாளர்களிடமிருந்தும் மற்றும் மருந்து விநியோகஸ்தர்/மொத்த வியாபாரிகளிடமிருந்தும் மாதிரி மருந்து வகைகளை எடுத்து அவைகள் தரம் வாய்ந்தவையா என்று சோதித்துப் பார்க்கிறார்கள். அச்சோதனையின் வாயிலாக குறிப்பிட்ட எந்த மாதிரி மருந்து வகையானது தரம் குறைந்தது என்று அறியவந்தால் உடனடியாக அந்த மாதிரி மருந்தினத்தைச் சார்ந்த மொத்த இருப்புகளை கைப்பற்றி அவற்றை எவ்விதத்திலும் பயன்படுத்தாவண்ணம் முடக்கி அந்த மருந்து விநியோகஸ்தரின் பேரிலும் தயாரிப்பாளரின் பேரிலும் 1940-ம் வருடத்திய மருந்து மற்றும் வாசனைப் பொருட்கள் சட்டத்தின் கீழ் குற்ற நடவடிக்கை எடுக்கிறார்கள்.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, இந்த மருந்துகளை டெண்டர்கள் மூலமாக வாங்குவதால் மிகக் குறைந்த விலைக்கு கொடுக்கவேண்டுமென்று அவர்கள் தரம் குறைந்த மருந்துகளைக் கொடுப்பதாகவும், காலாவதியான மருந்துகளை திரும்பவும் அரைத்து ரசாயனங்களை சேர்த்துக் கொடுப்பதாகவும் அதை மிகக் குறைந்த விலைக்குக் கொடுப்பதாகவும் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர், அப்படிப்பட்ட தனியார் கம்பெனியிலே வேலை செய்கிறவர் எனக்குச் சொன்னார். அந்தத் தகவலை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா? ஆகவே தரமுள்ள மருந்துகளை நேரடியாகவே வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் எந்த விதமான நிகழ்ச்சியும் நடப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. அவர்களே சொன்னார்கள், அவருக்கு நெருங்கிய நண்பர், அந்தக் கம்பெனியில் வேலை செய்கிறவர் அப்படிச் சொன்னார் என்று சொன்னார். எந்தக் கம்பெனி என்று அவர் விளக்கமாகச் சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : அரசாங்க மருத்துவ மனைகளில் மருந்துகளை வாங்குகிற காலத்தில் அரசாங்கத்தினால் உற்பத்தி செய்யப்படக்கூடிய மருந்துகள் அல்லது ஏராளமான ரக மருந்துகள் தனியார் கம்பெனிகளிடம் இருந்து வாங்கப்படுவது என்பது உண்மை. இன்றைக்கு நடக்கிறது. இந்த மருந்துகளின் தரப் பரிசோதனை தொடர்ச்சியாகவே நடத்தப்பட்டு வந்து தான் அரசு மருந்துகளை வாங்குகிறதா? அல்லது தனியார்களுடைய கம்பெனிகளின் லேபிளைப் பார்த்து அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய வரையறைகளை நம்பி வாங்குகிறார்களா? அப்படி வாங்குவதில் அந்த மருந்துகள் சரியாக தயாரிக்கப்பட்டனவா இல்லையா என்று புரியாமல் ஈக்குவிலன்ட் ஆக இருக்கிற மருந்துகளை வாங்கிக் கொடுப்பதால் தவறுகள் ஏற்படுகின்றன. அதை எப்படி அரசு சமாளிக்கப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மத்திய, மாநில அரசினுடைய நிறுவனங்களிடமிருந்து தான் மருந்துகள் வாங்கப்படவேண்டுமென்று ஆணைகள் அவ்வப்போது பிறப்பிக்கப்பட்டுள்ளன. சில நேரங்களில் இந்த மத்திய, மாநில அரசின் நிறுவனங்களிடம் இருந்து மருந்துகள் கிடைக்காத சில சூழ்நிலைகள் ஏற்படுகிறபொழுது, அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது தனியார்களிடமிருந்தும் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி வாங்கப்படுகிற மருந்துகள் ஆய்வாளர்களால் அவ்வப்போது பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. ஏதாவது குற்றம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டால் அந்த பேட்ச் மருந்துகள் எல்லாம் மக்களுக்கு வழங்கப்படாமல் அப்படியே நிறுத்தி வைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட மருந்துகளை யார் கொடுத்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-50)

ஆகவே, குறிப்பாக இதுபோன்ற தவறுகள் நடைபெறாத வண்ணம் செய்யப்படுகின்றன. மற்ற மருந்துகள் ஏதாவது, அதற்கு சப்ஸ்டிடுயூட் என்று சொல்லக்கூடிய வகையில் பயன்படுத்துகிற நேரத்தில், இத்தகைய நிலைகள் ஏற்படுகிறதா

என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். இன்றைக்கு ஆம்பிசிலின் என்று சொல்லக்கூடிய அதே மருந்து, பலவேறு விதமான நிறுவனங்களாலே, பல்வேறு பெயர்களாலே தயாரிக்கப்படுகிறது. I. D. P. L. தயாரிக்கின்ற அதே மருந்தை, Hindusthan Antibiotics தயாரிக்கின்ற அதே மருந்தை, Tamil Nadu Dada Chemicals தயாரிக்கின்ற அதே மருந்தை, பல்வேறு விதமான பெயர்களாலேதான் தயாரிக்கிறார்களே தவிர, ஆனால், அந்த மருந்தினுடைய இணைப்பிலே இருக்கிற சக்திகள், ஒரே சக்தியைத்தான் பெற்றிருக்கின்றன. ஆகவே, ஏதாவது தவறுகளைக் காணும்போது, அவ்வப்போது ஆய்வாளர்கள் அதைத் தேர்ந்தெடுத்து பரிசோதனை செய்து நடவடிக்கை எடுக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, அரசு மருத்துவ மனைகளிலே பணியாற்றக்கூடிய மருத்துவர்கள் தனியாகத் தொழில் செய்யக்கூடிய காரணத்தாலும், வேறு பல சந்தர்ப்பச் சூழ்நிலைகளாலும் அரசு மருத்துவ மனைகளில் அதிக அளவு மருந்து களவாடப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த நிலையில் அரசு மருத்துவ மனைகளில் வழங்குகின்ற மருந்துகளின் மீது அரசு முத்திரை பதிக்கக்கூடிய நிலை வருமா? அப்படி முத்திரை பதிக்கப்பட்ட பின், அம்மருந்துகள் வெளியே வேறிடங்களில் கண்டெடுக்கப்படுமானால் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே, அப்படிப்பட்ட ஆலோசனையை ஏற்று அரசு பரிசீலிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இது போன்ற மருந்து திருட்டை நிறுத்துவதற்காகத்தான் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே அந்த மருந்துகளிலே அரசினுடைய சின்னம் பொறிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, இன்றைக்கு அவைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, கடந்த 6 மாத காலத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி அரசு மருத்துவமனைகளிலே 3 பேர் பென்சிலின் இன்ஜக்ஷன் போட்டதால், மரணம் அடைந்து இருக்கிறார்கள் என்ற தகவல்கள் நமக்கு முன்னால் இருக்கின்றன. இது மருந்துகள் தரக் குறைவினாலேயா அல்லது பென்சிலின் என்ற இன்ஜக்ஷன் இன்றையதினம் வைத்தியத்திற்கு உபயோகப்படாமல் இருக்கிறதா? அப்படி மரணம் அடைந்தவர் குடும்பங்கள்--சிகிச்சைக்காக வந்தவர்கள் திடீரென்று மரணம் அடைந்திருக்கிறார்கள்—ஆகவே, அந்தக் குடும்பங்களை—பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்பொழுது அந்த பென்சிலின் மருந்து மருத்துவ மனைகளில், 'ஓ. பி.' என்று சொல்லக்கூடிய வெளி நோயாளி களுக்குப் போடுவது தடை செய்து, நிறுத்தி வைக்கப்பட்டிருக் கிறது. பென்சிலின் மருந்தினால் ஏற்படக்கூடிய இத்தகைய விளைவுகளுக்கு காரணம் 'எக்ஸ்டெர்னல் அப்ளிகேஷன்' என்று சொல்லக்கூடிய வகையில், 'பென்சிலின்' களிம்புகளையும் நாம் தோலிலே, ஏதாவது சரும வியாதிகள் ஏற்படுகிற நேரத்தில் போடுவதாலும், இத்தகைய பென்சிலின் உடலிலே ஏற்றும் பொழுது, அந்த பென்சிலின் சக்தி மயிர்க்காலிலே, உடலிலே ஊடுருவிச் செல்வதாலே. பென்சிலின் மொத்தமாக ஊசிமூலம் ஏற்றப்படுகிறபொழுது இத்தகைய விளைவுகள் ஏற்படுகிறது. ஆகவே, அதிகமாக, 'எக்ஸ்டெர்னல் அப்ளிகேஷன்ஸ்', இருக்கிறது. இன்றைக்குத் தொண்டையிலே வலி ஏற்படுமானால் கூட, பென்சிலின் லாஸ்ஸஞ்சஸ் வாங்கிச் சாப்பிடுகிற நிலைமைகளை நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே, இன்றைக்கு பென்சிலின் உட்கொள்ளுகிற காரணத்தாலே, பயன்படுத்துகிற காரணத்தாலே உடலிலே பென்சிலின் ஏற்றும்போது, இத்தகைய விளைவுகள்-- இழப்புகள் ஏற்படுகிறது. ஆனால், சில இன்றியமையாத வியாதிகளுக்கு பென்சிலின் ஒரு இன்றியமையாததாக இருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.....இந்த பென்சிலி னால் ஏற்படும் விளைவு 1 முதல் 6 வயது உள்ள குழந்தை களுக்கு ஏற்படுவதில்லை. ஆனால், குழந்தைகளுக்கு எந்தவித மான வியாதிக்கும் பென்சிலின் இன்றியமையாததாக இருக்கிறது என்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம். இன்றைக்குக் கூட பல மருத்துவ மனைகளிலே இருந்து மருத்துவர்கள் சில குறிப்பிட்ட நோய்களுக்கு இந்த பென்சிலின் தர வேண்டாமென்பதிலிருந்து விதி விலக்குத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் மானியக் கோரிக்கை மீது பேசுகிறாரா என்ன? துணைக் கேள்விக்குச் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, அவர் கேட்ட கேள்வியில் இவ்வளவும் இருக்கிறது, சொல்லித்தான் ஆகவேண்டும். அவர் கேள்வியைச் சுருக்கி இருப்பாரானால் நான் விடையையும் சுருக்கி இருக்கலாம். ஆகவே, பென்சிலின் இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது, மக்களுடைய உடலை, உயிரைக் காக்கத்தான்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே ஏ. பி. சி, சல்பேடக்ஸ் போன்ற மாத்திரைகள் இரண்டு பைசா விற்கும் இருக்கிறது 10 பைசாவிற்கும் இருக்கிறது. அதேபோல

இன்ஜெக்ஷன்களும் 1 ரூபாய்க்கும் இருக்கிறது. 5 ரூபாய்க்கும் இருக்கிறது, அது அந்தக் கம்பெனிகளின் தரத்தைப் பொறுத்தது. அரசு மருத்துவ மனைகளில் பாம்பே டேப்பிலட் கம்பெனி என்ற கம்பெனியிலிருந்து சீப்ரேட்டாக மருந்துகள் வரவழைக்கப் படுகின்றன. ஆனால் அவைகள் விலைமலிவாக இருப்பதினாலேயே தரம் குறைந்திருக்கிறது. அதனால் அரசு பெரிய கம்பெனிகளில் விலை கூடியிருந்தாலும், பூட்ஸ், ஸ்டேண்டர்ஸ், டி. சி. எப், கிளாக்ஸோ போன்ற புகழ்பெற்ற மருந்து கம்பெனிகளில் விலை உயர்ந்ததாக இருந்தாலும் மருந்தை வாங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில, மத்திய அரசினுடைய மருந்து தயாரிக்கும் நிறுவனங்களிலிருந்துதான் அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்கப்படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசு மருந்து தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்துதான் அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அந்த மருந்து அங்கே இல்லை என்று சொன்னால், இல்லாத மருந்தை மற்ற கம்பெனிகளிடமிருந்து தானே வாங்கவேண்டி ஏற்படுகிறது. அப்படி வாங்கும்போது கொடேஷன் போட்டு வாங்கக்கூடிய நிலை சரியில்லை. கொடேஷன் போடுவதால் குறைந்தவிலையில் கிடைக்கும். ஆனால் குறைந்தவிலையில் கிடைக்கக்கூடிய மருந்துகள் தரமானதாக இருக்காது. மருந்தின் தரத்தைப்பார்த்து நல்ல கம்பெனிகளில் பெரிய கம்பெனிகளில் மருந்தை வாங்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன் வருமா என்று கேட்கிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் நோயாளிகளுடைய நோய்களுக்குத் தக்க மருந்துகள் ஸ்டாக் இருப்பது இல்லை என்ற பிரச்னை நடைமுறையில் இருந்து வருகிறது. குறிப்பாக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுக்கு எழுதிக் கொடுக்கும் மருந்துகள் தேவையான மருந்துகள் மருத்துவ மனையில் இருப்பது இல்லை, வெளியே சென்றுதான் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். தேவையான மருந்துகளை வாங்கி வைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1979 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல குறைபாடுகள் ஏற்படக்கூடாது என்று எல்லா மருத்துவ மனைகளிலும் தேவையான மருந்துகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில நேரங்களில் அதிகமாக உபயோகம் இல்லாத மருந்துகள் ஏதாவது தேவைப்பட்டால் அவைகள் மருத்துவ மனைகளில் கிடைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்: அப்படிப்பட்ட நேரத்தில்தான் வெளியே இருந்து வாங்கிக் கொண்டு வரப்படுகிறது. அதிக அளவு பயன்படாத மருந்துகளை அதிக அளவில் வாங்கி வைத்திருந்தால் பின்னால் அது உபயோகம் இல்லாமல் போகும்போது வெளியே தூக்கி எறிந்துவிட வேண்டிய நிலை ஏற்பட்டு விடும். அதனால் தான் அப்படிப்பட்ட மருந்துகளைத் தவிர மற்ற தேவையான மருந்துகள் எல்லாம் எல்லா மருத்துவ மனைகளிலும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்டு இந்த மருத்துவ மனையில் இல்லை என்ற விவரத்தை சுட்டிக் காட்டுவார்களே யானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தயாரிக்கப்படுகிற மருந்துகளை எத்தனை பேர்களுக்கு, எத்தனை தனியார் மருந்து தயாரிப்பவர்களுக்கு உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு உரிமம் தருகிறதா அல்லது மத்திய அரசு உரிமம் தருகிறதா ? அப்படி உரிமம் கொடுக்கப்படுவதற்கு ஏதாவது தடைகள் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அதிகமாக விவரங்களை விடையாகச் சொல்ல இயலும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு ஊசி போடுகிறபோது ஏதாவது மாற்றிப் போட்டுவிட்டால் இறந்து விடுகிறார்கள். அப்படிப் பட்டவர்களின் குடும்பத்திற்கு, அவர்கள் வைத்தியம் செய்து கொள்ளவருகிறார்கள், ஆனால் இறந்து விடுகிறார்கள், அவர்களுடைய குடும்பத்திற்கு நிவாரணம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; தலைவர் அவர்களே, அப்படி குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டுவார்களேயானால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :- ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. தகவல் கோரல்

அ. கைது செய்யப் பெற்ற விவசாயிகள் விடுதலை குறித்து

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, முன்பு நடந்த இந்த விவசாயிகளின் பந்த்தின்போது ஆயிரக்கணக்கான பேர்கள் கைது செய்யப்பட்டார்கள், அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று பல்வேறு ஊர்களில் இருந்து தந்தி வந்து இருக்கிறது. மதுரை, திருச்சி ஆகிய ஊர்களில் எல்லாம் கொள் அளவுக்கு மேல் ஜெயிலில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர்களையெல்லாம் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அவர்களை ஏன் இவ்வளவு நாட்கள் வைத்திருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. சம்பவங்கள் நடந்து முடிந்தபிறகும்கூட போலீஸ்காரர்கள் அவர்கள் மீது அடக்கு முறை அதிகாரம் செய்து வந்திருப்பதாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு விஷயம். அதைபிறகு பேசலாம் நீங்கள் பேசவந்ததை முதலில் பேசி முடியுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இது இப்பொழுது நடந்த சம்பவம்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அது பற்றி பின்னர் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது பேசிக்கொள்ளலாம், விவசாயிகள் விடுதலை குறித்து மட்டும் விளக்கிவிட்டு உட்காருங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சரி, இம்மாதிரி பந்துக்கள நடைபெறுவது போன்ற சம்பவங்கள் நிற்கப்படவேண்டும். போலீசினுடைய வன்முறைச் செயல்கள் தடுக்கப்படவேண்டும், கைது செய்யப்பட்டவர்கள், இந்த பந்துகளில் கைது செய்யப் பட்டவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.